**வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2015**

**2015/04**

**இடம்** : வடக்கு மாகாண சபையின் குழுக் கூட்ட அறை

**காலம்** :- 07.09.2015 (திங்கட்கிழமை) காலை 10.00 மணி

**சமுகமளித்த கல்வி ஆலோசனைக் குழுவினர் :-**

- கௌரவ கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராசா (தலைவர்)
- கௌரவ எதிர்க் கட்சித் தலைவர் திரு.த.சி.தவராசா.
- கௌரவ பிரதி அவைத் தலைவர் திரும.அன்ரனி ஜெயநாதன்.
- திரு.இ.ஆனல்ட் – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.பா.கஜதீபன் – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.இ.இந்திரராசா – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.

**சமுகமளித்த ஏனையோர்**

- ஜனாப்.அஸ்மின் – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.கே.சிவநேசன் – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.அ.பரஞ்சோதி – கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- திரு.கே.என்.கனகரத்தினம் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.எம்.பி.நடராஜ் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.ப.அரியரத்தினம் – கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- கௌரவ திரு.வே.சிவயோகன் – வடக்கு மாகாணசபை உறுப்பினர்.
- திரு.இ.இரவீந்திரன் – செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.
- திரு.எஸ்.உதயகுமார் – மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.
- திரு.ராஜா ரணசிங்க – பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- எந்திரி.தே.சுரேஸ்குமார்,பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- எந்திரி.எஸ்.விகிர்தன், பாடசாலை வேலைகள் பொறியியலாளர், கல்வி அமைச்சு,வ.மா.
- திரு.ஆ.க.சண்முகநாதன் – கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.
- திரு.மா.தேவேந்திரன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்), மா.க.அமைச்சு
- திரு.கே.முகுந்தன் – விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- திரு.ம.பிறின்ஸ் லம்பேர்ட் – விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்
- திருமதி.செ.சு.செபஸ்ரியன் – உதவிச்செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- திரு.தி.ஞானசுந்தரன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்), மா.க.அமைச்சு

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் நான்காவது கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு சமுகமளித்தவர்களை வரவேற்று 20.07.2015 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில் வடக்கு மாகாண சபையின் ஆலோசனை குழுவில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில் இருவர் மட்டுமே பங்குபற்றியிருந்ததனால் தொடர்ந்து கூட்டத்தை நடாத்துவதற்கு நிலையியல் கட்டளைகள் இடந்தராமை காரணமாக கூட்டத்தை இடைநிறுத்தியதாகவும் கல்வி ஆலோசனை குழுவில்

அங்கத்தவராகவுள்ள கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.அ.இராமநாதன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ளதனால் அவரிற்கு பதிலாக புதிய அங்கத்தவரை தெரிவு செய்ய கோரிக்கை வைக்கப்படுமென கௌரவ கல்வி அமைச்சர் தெரிவித்து கூட்டத்தை ஆரம்பித்தார்.

- **விளையாட்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு தொடர்பானது.**

  விளையாட்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பிற்கான நேர்முகத்தேர்வு பாராளுமன்ற பொதுத் தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டதாகவும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு திகதி நிர்ணயம் செய்யப்பட்டு கூடிய விரைவில் நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

- **யா/ஒஸ்மானியா கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பானது.**

  யா/ஒஸ்மானியாக் கல்லூரி அதிபராக தென் இலங்கையைச் சேர்ந்த அதிபர் தரத்தையுடையவர் 08.09.2015 அன்று கடமையேற்கவுள்ளார். கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஜனாப்.அ.அஸ்மின் அவர்கள் பாடசாலை உப அதிபர் நியமனத்தையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

- **அதிபர் சேவை இடமாற்றம் தொடர்பானது.**

  அதிபர் சேவை இடமாற்றங்கள் தொடர்பாக வலயக் கல்வி அலுவலகங்களில் இது சம்பந்தமாக ஆராய்ந்து மத்திய கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியுயர்வு கிடைத்த அதிபர்களுக்கு பொருத்தமான பாடசாலைகளை வழங்குவதற்கு ஏதுவாக நேர்முகத் தேர்வு இடம்பெற்று உரிய பாடசாலைகள் வழங்கப்பட்டன. 88 பேரிற்கு நியமனம் வழங்கப்பட்டதாகவும் அவர்களில் 79 பேர் கடமையேற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. நவம்பர் மாதம் அதிபர் தரம் II இல் இருக்கும் அதிபர்களிற்கு தரம் I கிடைக்க இருப்பதனால் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

  கல்மடு பாடசாலைக்கு அதிபர் நியமனம் திருப்தியில்லை – **திரு இ.இந்திரராசா – கௌரவ மாகாணசபை உறுப்பினர்.**

  கிளிநொச்சி வலயத்தில் திரு புண்ணியமூர்த்தி அவர்களிற்கு உரிய பாடசாலை வழங்கப்படவில்லை – **திரு.ப.அரியரத்தினம் – கௌரவ மாகாணசபை உறுப்பினர்.**

- **தீவக கல்வி வலயத்தில் சேவைக் காலத்தை முடித்தவர்களின் இடமாற்றம் தொடர்பானது.**

  தீவக கல்வி வலயத்திற்கு விஞ்ஞானப் பட்டதாரிகள் நியமிக்கப்படவேண்டியுள்ளதால் விஞ்ஞானப் பட்டதாரிகளின் நியமனத்தின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

- **தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பானது.**

தொண்டராசிரியர்கள் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் தயார் செய்யப்பட்டு கல்வி இராஜாங்க அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. கௌரவ எதிர்கட்சித் தலைவர் தற்போதைய சமூக சூழ்நிலையில் தொண்டராசிரியர் நியமனம் வழங்குவது தவறு என்றும் 2010 இற்கு முற்பட்ட ஆசிரியர்களுக்கே நியமனம் வழங்க வேண்டும் என்றும் அதிபர்கள் தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்தை நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.இ.இந்திரராசா அவர்கள் தகுதியானவர்களுக்கே நியமனம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சனவரி மாதம் 2016 இல் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் கூறப்பட்டது.

- **வ/விபுலானந்த கல்லூரி அதிபர் திரு.கந்தையா தனபாலசிங்கம் SLPS – I அவர்களது ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பானது**

  கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.இ.இந்திரராசா அவர்கள் திரு.க.தனபாலசிங்கம் இடைக்கால தடையையும் மீறி கையொப்பமிடுவதாக தெரிவித்தார். உதவிச் செயலாளர் அவர்கள் பாடசாலையில் கையொப்பமிட முடியாதெனவும் வலயக் கல்வி அலுவலகத்தில் கையொப்பமிடலாம் எனவும் தெரிவித்தார். செயலாளர் அவர்கள் விசாரணைக் குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் 30 இற்கு மேற்பட்டோரிடம் விசாரணை நடைபெறவேண்டியுள்ளதனால் கால தாமதம் எற்படுவதாகவும் கூடிய விரைவில் விசாரணையை முடிவுறுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். வழக்கு , விசாரணைகள் முடிவடைந்த பின் புதிய அதிபர் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது

- **யா/கதீஜா பெண்கள் கல்லூரியை மீள ஆரம்பித்தல் தொடர்பானது.**

  யா/கதீஜா பெண்கள் கல்லூரி மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஜனாப்.அ.அஸ்மின் அவர்கள் பாடசாலை காணிக்குள் குடியிருப்போரை வெளியேற்றுமாறு கேட்டுக்கொண்டார். இவ் விடயம் தொடர்பாக மீள்குடியமர்வு அமைச்சிற்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

- சமளங்குளம் – ஒட்டுசுட்டான் , விஸ்வமடு பகுதி மாணவர்களிற்கு பாடசாலை செல்வதற்கு பேருந்து வசதியின்மை – **திரு.கே.சிவநேசன் , கௌரவ மாகாணசபை உறுப்பினர்.**

  கிளிநொச்சி டிப்போவில் தொடர்பு கொண்டு தீர்வு பெறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

- நெடுந்தீவு பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை பாரிய குறைபாடாக உள்ளது – **திரு.கே.என்.கனகரத்தினம் – கௌரவ மாகாணசபை உறுப்பினர்.**

- **பாடசாலை தரமுயர்த்துதல்**

1. மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை , க.பொ.த. சாதாரணதரம் ஆரம்பித்தல்– அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
2. வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் , விஞ்ஞானப் பிரிவு ஆரம்பித்தல் – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
3. வ/கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம் , க.பொ.த. கலை, வர்த்தக பிரிவு ஆரம்பித்தல் – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
4. மன்/ஈச்சளவக்கை அ.த.க.பாடசாலை , தரம் 11 – வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.
5. கிளி/செல்வநகர் தமிழ் வித்தியாலயம் 6லிருந்து 11வரை – தரம் 06 தொடங்கப்பட்டுள்ளது . தொடர்ந்து நடைபெறும்.
6. யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை , க.பொ.த. உயர்தரம் 2016இல் ஆரம்பித்தல் – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
7. வ/கருங்காலிக்குளம் அ.த.க. பாடசாலை – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
8. தரம் 1C பாடசாலைகளில் தொழில் நுட்ப ஆய்வு கூடங்களை கொண்டிருப்பவற்றை தரம் 1AB ஆக தரமுயர்த்தல் – அறிக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
9. மன்/வேப்பங்குளம் அ.மு.க. பாடசாலை உயர்தரப் பிரிவு – அனுமதிக்கப்படுகின்றது.
10. வ/வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலயம், ஆரம்பப் பிரிவு – அனுமதிக்கப்படுகின்றது.
11. வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம்,ஆரம்பப் பிரிவு – அனுமதிக்கப்படுகின்றது.
12. யா/ஏழாலை மகா வித்தியாலயம் , ஆரம்பப் பிரிவு – அனுமதிக்கப்படுகின்றது.
13. செட்டிக்குளம் துட்டுவாகை கிராமத்தில் புதிய ஆரம்பப் பாடசாலை – அனுமதிக்கப்படுகின்றது.
14. உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரியில் ஆரம்பப் பாடசாலையை வேறாக்கல் – தற்போது உள்ள நிலையிலேயே தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

- **பாடசாலை பெயர் மாற்றம் தொடர்பாக**
  - யா/தாவடி இந்து தமிழக் கலவன் பாடசாலை – மாகாண கல்விப் பணிப்பாளர் அறிக்கை கோரப்பட்டுள்ளது.
  - யா/தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் – மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிக்கை கோரப்பட்டுள்ளது

- தனி ஒரு ஆசிரியரே கடமையாற்றும் பாடசாலைக்கு மேலதிக ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரிய கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு அன்ரனி ஜெயநாதனுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது
    - மு/அம்பகாமம் அ.த.க.பாடசாலை – துணுக்காய் வலயம்
    - பெரிய மடு அம்பாள் வித்தியாலயம்

**விளையாட்டு தொடர்பாக**

- **மாகாண விளையாட்டுப் போட்டி**
    - இடம்- நகர சபை விளையாட்டு மைதானம், வவுனியா.
    - திகதி – 26.09.2015 , 27.09.2015
    - ஆரம்ப நாள் பிரதம விருந்தினர் - கௌரவ வடக்கு மாகாண முதலமைச்சர் அவர்கள்.
    - இறுதி நாள் பிரதம விருந்தினர் - கௌரவ வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் அவர்கள்.
- விளையாட்டுத் திணைக்களத்தின் ஆளணியில் உள்ள Ground Boy நியமிக்க முடிவு செய்யப்பட்டது.
- அஞ்சலோட்டம் முதலமைச்சர் கிண்ணம் - யாழ் மாவட்டத்தில் நடாத்துதல்.
- உதைபந்தாட்ட இறுதிப் போட்டி –(மன்னார் எதிர் யாழ்ப்பாணம்)

  கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஆனல்ட அவர்கள் அப் போட்டியானது வீரர்களால் தடைப்படாது பார்வையாளர்களின் செயற்பாட்டால் மட்டுமே தடைப்பட்டதாகவும் மீள இப்போட்டியை நடாத்துவதில் பல்வேறு சிக்கல்கள் நிலவுவதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து அப் போட்டியை நடாத்தாமல் இரு அணிகளுக்கும் சம புள்ளிகள் வழங்குவதாக முடிவெடுக்கப்பட்டது.
- மன்னார் பல் தொகுதி விளையாட்டு அரங்கு பராமரிப்பிற்கான செலவை மன்னார் நகரசபையுடன் தொடர்பு கொண்டு பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
    - திறப்பு விழா – 03 ஒக்ரோபர் 2015
    - பிரதம விருந்தினர் - கௌரவ வடக்கு மாகாண முதலமைச்சர் அவர்கள்.
- மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் பயிற்றுநர்களை நியமித்தல்.

  விளையாட்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பிற்கான நேர்முகத்தேர்வு பாராளுமன்ற பொதுத் தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டதாகவும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு திகதி நிர்ணயம் செய்யப்பட்டு கூடிய விரைவில் நடைபெறவுள்ளது.

**கட்டடம் அமைத்தல்**

யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் பழைமையான கட்டடம் ஒன்றை மாற்றி புதிய கட்டடம் அமைத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு பழைய கட்டடத்தின் முகப்பினை அப்படியே வைத்துக் கொண்டு புதிய மண்டபம் அமைப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

**கலாசாரம் தொடர்பானது**

- **பண்டாரவன்னியன் சிலை அமைப்பது தொடர்பாக**

  கௌரவ வடமகாண பிரதி அவைத் தலைவர் திரு அன்ரனி ஜெயநாதன் அவர்கள் அரச அதிபரின் அனுமதி பெற்று மேற்கெள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

- **வடக்கு மாகாண கல்வி முறைமை மீளாய்வு, சிபாரிசுகள் அமுல்ப்படுத்தல்.**

  **(RIMP), (LMDMU)**

  ஐந்து விடயங்களுக்கு வடக்கு மாகாண அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவையாவன

  - **தமிழ் மொழி மூலமான கல்வி நிறுவகம்**

    வடக்கு மாகாண அமைச்சர் வாரியப்பத்திரம் தயாரித்து பிரதம செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.60 பேரிற்கு பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது. தொடர்ந்தும் வடக்கு மாகாண ஆசிரியர்கள் 15000 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது.

  - **RIMP**

    யா/நல்லூர் ஆனந்த வித்தியாலய கட்டடமொன்றில் இயங்குகின்றது. வேலைகள் கிரமமான முறையில் நடைபெறுகின்றன. போதிய இட வசதி காணப்படாமை பிரச்சினையாக உள்ளது. கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு.எம்.பி.நடராஜ் அவர்கள் வ/வவுனியா கோயில்குளம் பாடசாலையில் போதிய இட வசதி உள்ளதாக தெரிவித்தார். கௌரவ எதிக்கட்சித் தலைவர் திரு சி.தவராசா அவர்கள் பாடசாலை மலசல கூடங்கள் போதியளவு துப்பரவாக காணப்படாதிருப்பதாகவும் அதனை **RIMP** குழு கண்காணிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

  - **கற்றல் உபகரணங்களின் அபிவிருத்திக்கும் முகாமைத்துவத்திற்குமான பிரிவு**

    இதற்குரிய அலகினை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் ஆரம்பித்துள்ளனர். அது நடைபெற்று வருகின்றது.

- **பதிலீட்டு ஆசிரியர் அணி உருவாக்குதல்**

  அதாவது வடக்கு மாகாணத்திலுள்ள 34 கோட்டங்களில் ஒவ்வொரு கோட்டத்திலும் 70 பேர் கொண்ட ஆளணி உருவாக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறும். கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ப.அரியரத்தினம் நிதி வசதி பற்றி வினவியமைக்கு போதிய நித வசதி உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

- **வடக்கு மாகாணத்தில் பரிந்துரை செய்யப்பட்ட புதிய கல்வி முறைமையை அறிமுகப்படுத்தல்.**

  வட மாகாணத்தில் பரிந்துரை செய்யப்பட்ட புதிய கல்வி முறைமையை அறிமுகப்படுத்தும் வகையில் தென்மராட்சி, துணுக்காய் ஆகிய வலயங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இது ஒரு முன்னோடித் திட்டமாக அமையும். தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். இத் தெரிவுகள் சனநாயக முறைப்படி அமைய வேண்டும் என்றும் அரசியல் மயப்படுத்தக்கூடாது எனவும் கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் திரு சி.தவராசா அவர்கள் கேட்டுக்கொண்டார்.

- **2015 ஆம் ஆண்டுக்கான TSEP, PSDG,CBG ஆகிய நிதி ஒதுக்கீடுகளின் மீளாய்வு**

- பிரதம பொறியியலாளர் அவர்கள் 40% ஆன வேலைத் திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன என தெரிவித்தார்.

- **பட்டதாரி ஆசிரியர் நியமனம்**

  கூடிய விரைவில் நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

- **பகுதிநேர ஆசிரியர் நியமனம்**

  கௌரவ மாகாண சபை எதிர்கட்சி தலைவர் திரு சி.தவராசா அவர்கள் விஞ்ஞானம் , ஆங்கிலம் போன்ற பாடங்களிற்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் சங்கீதம் , நடனம் போன்ற பாடங்களிற்கு தேவைக்கு அதிகமாக உள்ளதாகவும் பகுதிநேர ஆசிரியர்களுக்கான அடிப்படை தகைமை குறித்தும் வினவினார். கௌரவ மாகாணசபை உறுப்பினர் திரு ப.அரியரட்ணம் அவர்கள் பகுதிநேர ஆசிரியர்களுக்கான சம்பளம் அதிகரிக்க வேண்டும் எனவும் கூறினார். சனவரி மாதம் தொடக்கம் பகுதிநேர ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பாக ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

- **புத்தளத்தில் இயங்கும் வட மாகாணப் பாடசாலைகள் பற்றியது**

  இந்த வருட இறுதியில் அவர்களுடன் கலந்துரையாடி பாடசாலைகளை வடமேல் மாகாண சபைக்கு கையளிக்கும் நடவடிக்கையை எடுத்தல் வேண்டும். கௌரவ மாகாண சபை உறுப்பினர்

**ஜனாப்.அ.அஸ்மின் அவர்கள் நடமாடும் சேவை ஒன்றை நடாத்தி ஆசிரியர்களுடைய கோவைகளை பூரணப்படுத்தப்படல் வேண்டும் என கேட்டுக் கொண்டதற்கிணங்க நடமாடும் சேவை நடாத்தப்பட இணக்கம் காணப்பட்டது.**

- **ஆசிரிய இடமாற்ற சபையில் 15% இற்கு மேற்பட்ட ஆசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஆசிரிய சங்கமே பங்குபற்ற முடியும்**

  **புதிய இடமாற்றக் கொள்கையில் இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.**

- **ஆசிரிய இடமாற்றக் கொள்கை**

  **துணுக்காய் வலயத்தில் 06 வருடத்திற்கு மேற்பட்டோருக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை என கௌரவ மாகாண சபை உறுப்பனர் திரு ப.கஜதீபன் அவர்கள் கேட்டுக்கொண்டார். இது தொடர்பாக வலயக்கல்விப் பணிப்பாளரை தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.**

**வேறு விடயங்கள்**

- **வவுனியா வடக்கில் உள்ள மாணவர் தொகை குறைந்த பாடசலைகளை ஒன்றிணைத்தல் தெடர்பாக ஆராயப்பட்டு பெற்றோருடன் கலந்துரையாடப்பட்டு முடிவு எட்டப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.**
- **வலிகாமம், கிளிநொச்சி ஆகிய வலயங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு வலயங்களாகப் பிரித்தல். கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ப.கஜதீபன் அவர்கள் வலிகாமம் வலயம் கூடியளவு பாடசாலைகளை கொண்டுள்ளமையால் வேலைப்பளு அதிகமாக காணப்படுவதாகவும் கூடிய விரைவில் இரண்டு வலயமாக பிரிக்குமாறும் கேட்டுக் கொண்டார். கௌரவ மாகாணசபை எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி வலயத்தை இரண்டு வலயங்களாக பிரிப்பதற்கு சம்மதம் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். கௌரவ அமைச்சர் அவர்கள் கிளிநொச்சி வலயத்தை இரண்டு வலயங்களாகப் பிரிப்பதில் பூகோள ரீதியாக சில பிரச்சினைகள் இருப்பதாக எடுத்துக் கூறினார். தொடர்ந்து கலந்துரையாடப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.**
- **பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கான நிதியுதவி வழங்கும் செயற்பாடு தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**
- **கிளிநொச்சி வலயத்தில் தரம் 03 இற்கு இரண்டு நாட்களில் நடாத்தப்பட வேண்டிய செயலமர்வை ஒரே நாளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடாத்தப்பட்டதாகக் கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு ப.அரியரத்தினம் தெரிவித்தார். இவ்வாறான செயற்பாடுகளால் மாணவர்கள் விரக்தி நிலைக்கு ஆளாக்கப்படுவர் எனவும் குறிப்பிட்டார்.**

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு செல்வம் அடைக்கலநாதன் அவாகளுடைய கோரிக்கையான மடு வலய கல்விப் பணிப்பாளருடைய இடமாற்றம் தொடர்பாக சனவரி மாதம் 2016இல் வருடாந்த இடமாற்றத்தில் தீர்க்கப்படும் எனக் கூறப்பட்டது.

- தமிழ்த்தினப் போட்டிகளை மாவட்ட மட்டப் போட்டிகளாக நடாத்த வேண்டுமெனக் கோரிக்கை வைத்துள்ளார். வலய ரீதியாகப் போட்டிகளை நடத்தாது மாவட்ட ரீதியாக போட்டிகளை நடாத்த வேண்டுமெனக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. உதவிச்செயலாளர் அவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுமதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நண்பகல் 12.30 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்.**